(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **53**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 பெப்புருவரி 24, புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ ரொசான் ரணசிங்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேசா விதானகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை புரையிரதத் திணைக்களத்தின் செயற்சாதனை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**2. மனுக்கள்:**

(1) பிலஸ்ஸ, ரத்னேக்கம, "சுப" இல் வதியும் திரு, எஸ்.எம். கருணாரத்னவினது 2015.09.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாலிந்த திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(2) (i) கெலிஓய, கொடபொல, இல. 104 இல் வதியும் செல்வி எம்.டப்ளியூ. ஹேமலதாவினது 2016.01.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) ஹந்தெஸ்ஸ, இம்புல்தெனிய, இல. 7 இல் வதியும் செல்வி ஆர்.எம். யஸத மெனிகேயினது 2016.01.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ லக்கீ ஜயவர்தன சமர்ப்பித்தார்.

(3) (i) பிலஸ்ஸ, கண்டி வீதி, டேஸிமவுன்ட், இல. 308 - 309 இல் வதியும் திரு.

எஸ்.எம். விஜேதுங்கவினது 2016.01.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) குளியாப்பிட்டிய, பண்டிவெல, அனுக்கனவில் வதியும் திரு, டப்ளியூ.எம். குணரத்னவினது 2016.01.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஜே.சீ. அலவதுவல சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3. சட்டமூலம் கொண்டுவர அனுமதி**: "கஹவில்கொட ஜாதிக உறும உயன எண்ணக்கரு நூதனசாலை அபிவிருத்தி நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" என்னும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ நாமல் ராஜபஷ பிரேரித்தார். கௌரவ சாலிந்த திசாநாயக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் உள்ளக விவகாரங்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**4. சட்டமூலம் கொண்டுவர அனுமதி**: "த பேரண்ட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" என்னும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ நாமல் ராஜபஷ பிரேரித்தார். கௌரவ சாலிந்த திசாநாயக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. அரசியலமைப்புச் சபையை நியமிப்பதற்கான தீர்மானம்:** ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 சனவரி 09),— "இலங்கைக்கு புதிய அரசியலமைப்பொன்றை வகுத்தல் அவசியமென இலங்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் இணக்கப்பாடு காணப்படுவதாலும்;

2015, சனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் போது மக்கள் சட்ட ஒழுங்குக்கு மதிப்பளித்து சனநாயகத்தை வலுப்படுத்தும் அரசியல் கலாசாரமொன்றை தாபிப்பதற்கு தெளிவான மக்கள் ஆணை மக்களால் வழங்கப்பட்டுள்ளதாலும்;

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன, புதிய அரசியலமைப்பை சட்டவாக்கம் செய்து, மற்றும் பலவற்றுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட சனாதிபதித் தேர்தலின் போது வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்புக்கு வலுவூட்டுவதற்கான தனது அபிலாசையினைத் தெளிவாகக் கூறியுள்ளதாலும்;

மேலும் பல்வேறு விடயங்களுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழித்து, விருப்பு வாக்கு முறைமையை நீக்கி நியாயமான பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையை உறுதிப்படுத்தி, அனைத்து பிரஜைகளினதும் சனநாயக உரிமைகளை பலப்படுத்தி, தேசிய பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வொன்றை

வழங்கக் கூடிய, தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தி சட்ட விதியை மதிக்கும் அரசியல் கலாசாரமொன்றை தாபிக்கக் கூடிய, மனித கௌரவத்தை உறுதிப்படுத்தும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுயாதீனத்தன்மைக்கும் உத்தரவாதம் அளித்து பொறுப்புமிக்கதும் வகைகூறக் கூடியமதுமான அரசாங்கமொன்றை மேம்படுத்தும் புதிய அரசியலமைப்பொன்றை சட்டவாக்கம் செய்தல் அவசியமாகின்றதனாலும்;

1. இலங்கையின் புதிய அரசியலமைப்பு பற்றிய மக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்று அவற்றைப் பற்றிக் கலந்தாராய்ந்து அரசியலமைப்பின் 75ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அதன் பரிசீலனைக்காக அரசியலமைப்பு சட்டமூலத்தின் வரைவைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக இதனகத்து இதன் பின்னர் 'அரசியலமைப்புச் சபை' என அழைக்கப்படும் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பாராளுமன்றக் குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் அரசியலமைப்பு சபையின் தவிசாளராக இருப்பார். அரசியலமைப்பு சபை ஏழு (7) பிரதித் தவிசாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் அவர்கள் அரசியலமைப்பு சபையினால் தெரிவுசெய்யப் படுதலும் வேண்டும்.

   கௌரவ சபாநாயகர் இல்லாத சந்தர்ப்பங்களில், சபைக்கூட்டங்களின் அமர்வுக்குத் தலைமை வகிப்பதற்கு அரசியலமைப்பு சபையின் பிரதித் தவிசாளர்களுக்கிடையே ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

3. அரசியலமைப்பு சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் இருபது (20) ஆக இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசியலமைப்பு சபைக்கான அரசியலமைப்பு சார்ந்த ஆலோசகர்களையும்;

   (ஆ) அரசியலமைப்பு சபைக்கான ஒரு சட்டத்துறைசார் செயலாளரையும் அத்தகைய சட்டத்துறைசார் செயலாளரின் உதவியாளர்களையும்;

   (இ) அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களினதும் நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் நோக்கத்துக்காக அரசியலமைப்பு சபையின் பணியாளர்களையும்; மற்றும்

   (ஈ) அரசியலமைப்பு சபையின் (சமூக ஊடகங்களை உள்ளடக்கிய) ஊடக பணியாளர்களையும் அரசியலமைப்பு சபை கொண்டிருத்தல் வேண்டும்.

   ஊடகப் பணியாளர்கள் இணையத்தளம் ஒன்றை நிறுவிப் பேணுவதுடன் இலங்கையின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை முறைக்கு தகுந்த விளம்பரம் வழங்குவதற்குப் பொருத்தமான ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

   அரசியலமைப்புச் சபையினதும் அதன் குழுக்களினதும் நடவடிக்கைகளும் அவ்வாறே, பொதுமக்களின் கருத்துக்களும் / சமர்ப்பிப்புகளும் ஆவணப்படுத்தப் படுவதையும் அத்தகைய வேறு தொடர்பான நிபுணத்துவ அல்லது தொழில்நுட்ப அபிப்பிராயங்களுடன் அத்தகைய இணையத்தளங்களில் பிரசுரிக்கப்படுவதையும் ஊடகப் பணியாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. அரசியலமைப்பு சபை பின்வரும் உப குழுக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

   (அ) பிரதம அமைச்சர் (தவிசாளர்), பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், நீதி அமைச்சர், மற்றும் அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படுகின்ற அரசியலமைப்பு சபையின் ஏனைய உறுப்பினர்கள் பதினேழு (17) பேரை விஞ்சாத எண்ணிக்கையைக் கொண்டதொரு வழிப்படுத்தும் குழு;

   வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் மற்றும் இலங்கையின் புதிய அரசியலமைப்பை வரையும் பணி ஆகியவற்றுக்கான பொறுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (ஆ) அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு

சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய ஏனைய உபகுழுக்கள்.

ஆயின், ஒவ்வொரு உப குழுவும் பதினொரு (11) பேரை விஞ்சாதவாறு உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு உப குழுவினதும் தவிசாளர் வழிப்படுத்தும் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

6. அரசியலமைப்பு சபை அதன் முதலாவது அமர்வின்போது:—

(அ) பிரதித் தவிசாளர்களைத் தெரிவுசெய்தலும்;

(ஆ) வாசகம் 5 (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களைத் தீர்மானித்தலும்; அத்துடன்

(இ) வாசகம் (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் வேண்டும்.

7. அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்காக அரசியலமைப்பின் வரைவொன்றை பிரேரிக்கும் தீர்மானத்தை சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழுவைக் கோரும் அரசியலமைப்பு சபை மேற்கொள்ளவேண்டிய தீர்மானத்தை பிரதம அமைச்சர் அரசியலமைப்பு சபையின் முதலாவது கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. அரசியலமைப்பு சபை அதன் அமர்வுகளை பாராளுமன்றச் சபையில் நடாத்துவதற்கு இத்தால் அதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது:

ஆயினும், மேல் மாகாணத்திற்கு வெளியே ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அதன் கூட்டங்களை நடத்துவதற்கு அரசியலமைப்பு சபை தீர்மானிக்கலாம்:

ஆயின், மேலும் பத்திரங்களைச் சமர்ப்பித்தல், தீர்மானங்களைப் பிரேரித்தல் மற்றும் வாக்களிப்பு ஆகியவை பாராளுமன்றச் சபையிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

9. அரசியலமைப்பு சபையின் அல்லது ஏதேனும் அதன் குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சேவைகளுக்காக எந்தவொரு நிறுவனத்தின் சேவைகளையும் வழிப்படுத்தும் குழு கோரலாம்.

10. அரசியலமைப்புச் சபைக்கு அத்துடன் / அல்லது அதன் பல்வேறு உபகுழுக்களுக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஏனைய நிபுணர்களை வழிப்படுத்தும் குழு நியமிக்கலாம்.

11. அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு திறந்ததாக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டு உடனடியாக வெளியிடப்படுதலும் வேண்டும். பொருத்தமானவிடத்து, அரசியலமைப்பு சபையின் அத்துடன்/ அல்லது அதன் உப குழுக்களின் நடவடிக்கைகளை ஒலிபரப்பு/ஒளிபரப்பு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசியலமைப்புச் சபை மேற்கொள்ளுதல் வேண்டும்.

சந்தேகங்களை நீக்குவதற்காக, மேலே சொல்லப்பட்ட விடயங்களை வெளியிடுவதற்கு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரிவு 17இன் பிரகாரம் பாராளுமன்றத்தின் விசேட அனுமதி குறிப்பாக வழங்கப்படுதல் வேண்டும் என இத்தால் குறிப்பாகத் தீர்மானிக்கப்படுகின்றது.

சந்தேகங்களை நீக்குவதற்காக, அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் நடவடிக்கைகள் ஏக காலத்தில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுவதுடன் இத்தால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கைகளின் வெளியீடு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரகாரம் தவறொன்றாக அமையாது எனவும் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

12. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக எந்தவொரு ஆளையும் அரசியலமைப்பு சபையின் முன் வரவழைப்பதற்கான தத்துவத்தை அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

13. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக

அத்துடன் / அல்லது பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் முடிவுகளை அறிக்கை செய்வதற்காக பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் எவரேனும் உறுப்பினரை வரவழைப்பதற்கான தத்துவத்தையும் அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

14. இது தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசியலமைப்பு சபையின் அலுவல்களை நடத்துவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் உபாயங்களையும் தீர்மானிப்பதற்கு அதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது:

ஆயின், வழிப்படுத்தும் குழுவின் உடன்பாட்டுடன் பிரதம அமைச்சரால் பிரேரிக்கப்படும் தீர்மானத்தைப் பின்பற்றி அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:

பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளில் இதற்கு முரணாக எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைமுறை விதிகள் இந்தத் தீர்மானத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

15. அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் பற்றிய அறிவித்தல் பிரதம அமைச்சரினால் அல்லது அது பற்றிய வழிப்படுத்தும் குழுவின் அங்கீகாரத்துடன், பிரதம அமைச்சரினால் அத்தகைய நோக்கத்துக்காக காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் அமைச்சரவையின் அத்தகைய அமைச்சரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

16. வாசகம் 5(ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் அத்தகைய ஒவ்வொரு உப குழுவும் நியமிக்கப்பட்டு பத்து (10) வாரங்களினுள் வழிப்படுத்தும் குழுவுக்கு தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. வாசகம் 5(ஆ)வின் கீழ் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் அறிக்கைகளையும் பொதுமக்கள் பிதிநிதித்துவக் குழுவின் அறிக்கையையும் பரிசீலித்ததன் மீதாக, வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. அரசியலமைப்பு சபை அதன் பின்னர் அறிக்கையினதும் அரசியலமைப்பு வரைவினதும் (ஏற்புடையதாயின்) பொதுவான அனுகூலங்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றி விவாதிப்பதுடன் உத்தேச திருத்தங்கள் பற்றியும் விவாதிக்கலாம். அத்தகைய விவாதத்தின் இறுதியில், "இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தையும் சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழு கோரப்படுமாக" என்னும் வினா அக்கிராசனத்தினால் அரசியலமைப்புச் சபைக்கு விடப்படும்.

19. அதன் பின்னர், வழிப்படுத்தும் குழு, விவாதத்தின்போது முன்மொழியப்பட்ட திருத்தங்களை, ஏதேனும் இருப்பின், பரிசீலித்து அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்கு இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய இறுதி அறிக்கையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானமும் அரசியலமைப்பு சபையினால் அங்கீகரிக்கப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரித்தல் வேண்டும்.

20. 18 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவாதத்தின் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:—

தவிசாளரால் அல்லது தவிசாளர் வருகை தந்திராத சந்தர்ப்பத்தில் எவரேனும் பிரதித் தவிசாளரால் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கம் வரிசைக் கிரமப்படி வாசிக்கப்படல் வேண்டும்.

(i) வாசகமொன்றுக்கு ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்ளலாம் அல்லது வாசகங்கள் நீக்கப்படலாம் அல்லது புதிய வாசகங்கள் சேர்க்கப்படலாம்.

(ii) விவாதத்தின் இந்தக் கட்டத்தின் போது அரசியலமைப்பு வரைவின்

விபரங்கள் அன்றி அதன் கோட்பாடுகள் பற்றி கலந்துரையாடலாகாது.

(iii) அரசியலமைப்பு வரைவின் ஏதேனும் முன்னைய பகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையதல்லாத திருத்தங்களைப் பிரேரிக்க முடியாது.

(iv) அரசியலமைப்பு வரைவின் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரும் வரைவு தொடர்பான விவாதம் நிறைவு செய்யப்படுவதற்கு முன்னரும் எவரேனுமொரு உறுப்பினர் தவிசாளரின் அனுமதியின் பேரில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட வாசகத்துக்கு திருத்தமொன்றைப் பிரேரிக்கலாம்.

(v) வாசகம் ஒன்றுக்கான திருத்தம் பற்றிய வினா முழுமையாக அக்கிராசனத்தினால் பிரேரிக்கப்படாதவிடத்து, வாசகமொன்று பிற்போடப்படலாம்.

(vi) அரசியலமைப்பு வரைவின் மீதி வாசகங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னரும் புதிய வாசகங்கள் கொண்டு வரப்படுவதற்கு முன்னரும் பிற்போடப்பட்ட வாசகங்கள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(vii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகளை பரிசீலனை செய்யப்படுவதற்கு முன்னர் புதிய வாசகங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு அதனை முதலாவது மதிப்பீடாக கருதுதல் வேண்டும். இதன் தொடரும் வினாக்கள் ‘‘வாசகம் இரண்டாம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்’’ மற்றும் ‘‘வாசகம் (அல்லது திருத்தப்பட்டதற்கு அமைவான வாசகம்) அரசியலமைப்பு வரைவில் சேர்க்கப்படும்’’ என்பனவாகும்.

(viii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் புதிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன் இவை புதிய வாசகங்களாகவே கருதப்படல் வேண்டும்.

(ix) எல்லா வாசகங்களும் அட்டவணைகளும் அத்துடன் பிரேரிக்கப்பட்ட புதிய வாசகம் அல்லது அட்டவணைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், முகவுரை, ஏதேனும் ஒன்று இருப்பின், அது பரிசீலிக்கப்பட்டு ‘இது அரசியலமைப்பு வரைவின் முகவுரையாக இருக்குமாக’ என்ற வினாவை விடுத்தல் வேண்டும்.

(x) அரசியலமைப்பு வரைவின் பெயரில் ஏதேனும் திருத்தங்கள் அவசியப்படின் மேலே விபரிக்கப்பட்ட நடைமுறைகளின் இறுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகள் 42, 43 மற்றும் 44இன் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அரசியலமைப்புச் சபையின் நடைமுறைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

22. அரசியலமைப்புச் சபையின் மூன்றில் இரண்டு பங்கினர் அரசியலமைப்பு வரைவு தொடர்பான தீர்மானத்தை அங்கீகரிக்காதவிடத்து இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சபையும் குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

23. அரசியலமைப்புச் சபை அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்குமிடத்து அறிக்கையும் மற்றும் அரசியலமைப்பு வரைவும் வழிப்படுத்தும் குழுவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு சபையும் உப குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

24. அத்தகைய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரசியலமைப்பின்

75(ஆ) மற்றும் 120(ஆ) ஆகிய உறுப்புரைகளின் பிரகாரம் அரசியலமைப்பை முற்றுமுழுதாக நீக்கி பதிலீடு செய்வதற்கான சட்டமூலமாக அமைச்சரவை சான்றுபடுத்துவதோடு அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையில் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு கருதப்பட்டு மக்கள் தீர்ப்புக்காக மக்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

25. இதனை அடுத்து அரசியலமைப்பின் உறுப்புரை 78(1) இன் பிரகாரம் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

26. அதன் பின்னர், சனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 154எ(2)இன் பிரகாரம் சட்டமூலத்தை ஒவ்வொரு மாகாண சபைகளின் கருத்துகளையும் பெற்றுக் கொள்வதற்காக அத்தகைய அனைத்து சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

27. இதன் பின்னர் பிரதம அமைச்சர் அத்தகைய சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன் அத்தகைய சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

28. மேல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையின் பிரகாரம் விசேட பெரும்பான்மையினால் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரிக்க வேண்டும்.

மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்கள் கூறப்பட்ட சட்டமூலத்துக்குச் சார்பாக வாக்களிக்குமிடத்து, சட்டமூலம் விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தினால் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் அரசியலமைப்பின் 79ஆவது உறுப்புரைக்கு அமைய தகுந்தவாறு சான்றுப்படுத்துவதுடன் இலங்கையின் இறைமை உரித்தாக்கப்பட்டுள்ள மக்களினால் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படும் வரை, சட்டமூலம் சட்டமாகாது.

29. இதன் பின்னர் அரசியலமைப்பின் 85(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களால் அங்கீகரிப்பதற்காக சனாதிபதியினால் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

30. சட்டமூலம் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுமிடத்து, அரசியலமைப்பின் 80(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியினால் சட்டமூலம் சான்றுப்படுத்தப்பட்டதன் பின் சட்டமூலம் சட்டமாக மாறும்.

31. அரசியலமைப்புச் சபை மற்றும், 5ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் மற்றும் இந்த தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் மற்றும் ஆலோசகர்களுக்கான செலவினங்கள் திரட்டு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் 150ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவ்விடயம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளைப் பாராளுமன்றம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

32. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, அரசியலமைப்புச் சபையினால் பிரேரிக்கப்பட்டவாறு இவ்வாறான அரசியலமைப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் அல்லது திருத்தத்துக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளுதல் பாராளுமன்றத்தின் பொறுப்பாக இருக்க வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

33. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களினால் அங்கீகரிக்கப்படுமிடத்து மாத்திரம்

அரசியலமைப்பு சட்டமூலம் சட்டமாக்கப்படுதல் வேண்டுமென இத்தால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது."எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(மு.ப. 10.25 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என தொழிற்சங்க மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ந..ப. 12.00 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா பிரேரிக்க கௌரவ மயில்வாகனம் திலக்கராஜா அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.22 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.14 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

"விவாதம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம், விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. விவாதம் மீண்டும் எதிர்வரும் தினமொன்றில் பாராளுமன்றம் நடைபெறும்.

**6. ஒத்திவைப்பு:** அவ்வேளை நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே, தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றி ஒத்திவைத்தார்.

பாராளுமன்றம் அதன் பிரகாரம், 2016 பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.1.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.